‘வாட்ஸ் அப்’பில் வலம் வருவது!

புகழ்பெற்ற மலையேற்ற வீரர் நிர்மல் உட்பட 6 பேர் பனிச்சரிவில் உயிரிழப்பு!

புதுடெல்லி, ஆக. 4 –

பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் மற்றும் சீனா எல்லைப் பகுதியில் உள்ள காரகோரம் மலைத்தொடரில், உலகின் 12வது மிக உயர்ந்த சிகரமான ‘பிராட் பீக்’ அமைந்துள்ளது.

புகழ்பெற்ற நேபாள வம்சாவளி மலையேற்ற வீரரான நிர்மல் ‘நிம்ஸ்’ புர்ஜா உள்ளிட்ட 6 பேர் அடங்கிய குழுவினர் மலையேற்றத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இந்நிலையில், அவர்கள் சென்று கொண்டிருந்த மேற்குப் பகுதி பாதையில், சுமார் 21,600 அடி முதல் 21,850 அடி உயரத்தில் கடந்த வெள்ளிக்கிழமையன்று திடீரென பனிச்சரிவு ஏற்பட்டது. இதில் சிக்கிய 6 பேரும் உயிரிழந்துவிட்டனர். இதை அவரது ‘எலைட் எக்ஸ்பெட்’ நிறுவனம் தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் அதிகாரப்பூர்வமாக உறுதி செய்துள்ளது.

பிரிட்டனின் ‘குர்க்கா’ மற்றும் ‘ஸ்பெஷல் போட் சர்வீஸ்’ (எஸ்பிஎஸ்) படைகளில் பணியாற்றிய முன்னாள் வீரரான நிர்மல் புர்ஜா, முழு நேர மலையேற்ற வீரரான பிறகு பல உலக சாதனைகளைப் படைத்துள்ளார்.

காவிரிப் பிரச்சினையை திசை திருப்பும் ‘டம்மி’ முதலமைச்சர்!

உதயநிதி ஸ்டாலின் ஆவேசம்!

5ஆம் பக்கத் தொடர்ச்சி...

செயல்படுத்துவது இன்னொன்று. இப்படி வாக்குறுதிகள் எதையுமே நிறைவேற்ற முடியாமல் `வாயில் வடை சுடுகிற ஆட்சி’தான் இன்றைக்கு அமைந்திருக்கக்கூடிய இந்த த.வெ.க. அரசு.

இதுவே 2006இல் கழக ஆட்சி அமைந்தபோது நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், தான் சொன்னபடி 7,000 கோடி ரூபாய் அளவிற்கு விவசாயக் கடனைத் தள்ளுபடி செய்தார். அதை எப்படி செய்தார்? அவர் முதலமைச்சராகப் பதவியேற்கிற அந்த மேடையிலேயே கோப்புகளைக் கொண்டுவந்து அங்கேயே கையெழுத்துப் போட்டார். சென்ற ஆட்சியில், நம் தலைவர் 12,000 கோடி ரூபாய் அளவிற்குப் பயிர் கடன் தள்ளுபடியை நம்முடைய தலைவர் செய்தார்.

இந்தச் சூழ்நிலையில்தான் இன்றைக்கு முழு பயிர்க்கடனையும் ரத்து செய்ய வேண்டும் என்று விவசாயிகள் போராட்டத்தை அறிவித்தீர்கள். ஆனால், சட்டமன்றத்தில் பேசிய முதலமைச்சர் என்ன தெரியுமா சொன்னார்? தி.மு.க.வின் தூண்டுதலால் இன்றைக்கு விவசாயிகள் போராட்டத்தில் இறங்கியிருக்கிறார்கள் என்று உங்களுடைய போராட்டத்தைக் கொச்சைப்படுத்தியவர் இன்றைய முதலமைச்சர் அவர்கள்.

கழக ஆட்சி நடந்தபோது மேகதாது அணையைக்கட்ட விடாமல் நாம் கர்நாடகாவைத் தடுத்தோம். ஆனால், இன்றைக்குத் தமிழ்நாட்டில் ஒரு மிக பலவீனமான ஆட்சி அமைந்திருக்கிறது. இந்த வாய்ப்பை எப்படியாவது பயன்படுத்தி மேகதாதுவில் அணை கட்டிவிடலாம் என்று கர்நாடக அரசு முழு முயற்சியில் இறங்கியிருக்கிறார்கள்.

இந்த அரசு, மேகதாது அணை கூடாது என்று சட்டமன்றத்தில் ஒரு தீர்மானம் அறிவித்தது. அப்போது அதை ஆதரித்து நான் பேசினேன். மேகதாது பிரச்சினை மிக மிக முக்கியமான ஒரு பிரச்சினை. இது கட்சிகள் கடந்து அனைவரும் ஒற்றுமையோடு இருக்க வேண்டிய பிரச்சினை. இந்த அரசு உடனடியாக அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்ட வேண்டும். தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகளும் ஒன்றாகச் சென்று ஒன்றிய அரசுக்கு நாம் நம்முடைய அழுத்தத்தைக் கொடுப்போம் என்று சொன்னேன். ஒன்றிய அரசுக்கு அழுத்தத்தைக் கொடுப்போம் என்று தான் சொன்னேன், உடனே ஆட்சியாளர்கள் பயந்துவிட்டார்கள்.

நேற்று கர்நாடகாவில் அனைத்துக் கட்சிக்கூட்டத்தைக் கூட்டி, காவிரி பிரச்சினையில் அவர்களுடைய ஒற்றுமையை இன்றைக்கு அவர்கள் காட்டியிருக்கிறார்கள். ஆனால், இங்கு இருக்கக்கூடிய இந்த முதலமைச்சர் அனைத்துக் கட்சிக் கூட்டத்தை நடத்துவதையே மிகவும் ஒரு அவமானமாக நினைக்கிறார்.

ஏக்கருக்கு 25,000 ரூபாய்!

குறுவையைப் பொறுத்தவரைக்கும் கடந்த வருடம் 6.5 லட்சம் ஏக்கரில் சாகுபடி நடந்தது. ஆனால், இந்த வருடம் வெறும் 1.5 லட்சம் ஏக்கரில்தான் சாகுபடி ஆகியிருக்கிறது. கிட்டத்தட்ட 14 லட்சம் விவசாயிகள் இதனால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். சுமார் 2,500 கோடி ரூபாய் அளவிற்கு விவசாயிகளுக்கு இன்றைக்கு இழப்பு ஏற்பட்டிருக்கிறது.

ஆகவேதான் ஏக்கருக்கு 25,000 ரூபாய் நிவாரணம் கொடுங்கள், பயிர்க் காப்பீட்டிற்கான பிரீமியத்தை அரசே செலுத்த வேண்டும், சம்பா சாகுபடிக்கு விதை, உரம், பூச்சிக்கொல்லி இவற்றையெல்லாம் மானியமாக அரசு கொடுக்க வேண்டும் என்று நம்முடைய தலைவர் அவர்கள் அரசுக்குக் கோரிக்கை வைத்தார்.

ஆனால் இந்தக் கோரிக்கையையும் ஏற்க இந்த அரசு தயாராக இல்லை. அதனால்தான் இன்றைக்கு வீதிக்கு வந்து நாம் போராடிக் கொண்டிருக்கிறோம். நாம் இவர்களிடம் கேட்டுக்கொள்வதெல்லாம் தேர்தல் அறிக்கையில் சொன்னபடி, முழு பயிர்க்கடனையும் தள்ளுபடி செய்ய வேண்டும், மேகதாது அணை கட்டுவது, தடுத்து நிறுத்தப்பட வேண்டும், வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு உரிய நிவாரணத் தொகையைச் செலுத்த வேண்டும், அதற்கு மிக மிக முக்கியமாக இந்த டெல்டா மாவட்டங்களை வறட்சி பாதிக்கப்பட்ட மாவட்டங்களாக அறிவித்தாக வேண்டும் என்று நம்முடைய கோரிக்கையை மீண்டும் இந்த அரசுக்கு நினைவூட்ட விரும்புகிறோம்.

விவசாயிகள் தொடர்பான இந்த பிரச்சினைகளையெல்லாம் வருகிற சட்டமன்றக் கூட்டத்தொடரில் விவாதித்து தீர்க்கப்படவேண்டும். இரண்டு நாளில் சட்டமன்றம் கூடுகிறது. ஐந்தாம் தேதி ஆரம்பிக்கிறது, சும்மா விடமாட்டோம். வருகிற சட்டமன்றக் கூட்டத்தொடரில், திராவிட முன்னேற்றக் கழகம் சார்பில் நிச்சயமாக இந்தப் பிரச்சினையை எழுப்புவோம்.

சட்டமன்றம், நீதிமன்றம், மக்கள் மன்றம் என அனைத்து இடங்களிலும் விவசாயிகளுக்கு ஆதரவாக, உங்களுடைய குரலாக திராவிட முன்னேற்றக் கழகம் என்றைக்கும் ஒலிக்கும். டெல்டா விவசாயிகளுக்குத் திராவிட முன்னேற்றக் கழகம் என்றைக்குமே பக்கபலமாக இருக்கும்.

தமிழ்நாட்டின் உரிமை!

காவிரிப் பிரச்சினையில் தமிழ்நாட்டின் உரிமையை என்றைக்கும் நிலைநாட்டுவோம் என்று சொல்லி, இந்தச் சிறப்பான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்த நம்முடைய முதன்மைச் செயலாளருக்கும், கழகத் தலைவர் அவர்களுக்கும், மாவட்டக் கழகச் செயலாளர்களுக்கும், நிகழ்ச்சியில் பங்கேற்ற அனைத்து விவசாயப் பெருங்குடி மக்களுக்கும், உங்கள் அத்தனை பேருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு கழக இளைஞர் அணிச் செயலாளரும் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலின் எழுச்சிமிக்க உரையாற்றினார்.

பங்கேற்றவர்கள்!

கழகத்தின் முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு, கழகத் துணைப் பொதுச் செயலாளர் மு.பெ.சாமிநாதன், தோழமை இயக்கங்களின் தலைவர்கள் ஜவாஹிருல்லா, தமீமுன் அன்சாரி, அபுபக்கர் சித்திக், ஜக்கய்யா, எம்.என்.ராமச்சந்திரன், ஜெயக்குமார்,

மாவட்டக் கழகச் செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான துரை.சந்திரசேகர், முன்னாள் அமைச்சர்கள் எஸ்.எஸ்.பழநிமாணிக்கம், எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், ரகுபதி, வைத்திலிங்கம, சி.வெ.கணேசன், எஸ்.எஸ்.சிவசங்கர், அன்பில் மகேஸ் பொய்யாமொழி, கோவி.செழியன், மெய்யநாதன், மதிவாணன்,

மாவட்டக் கழகச் செயலாளர்கள் பூண்டி கலைவாணன், தி.பழனிவேல், காடுவெட்டி தியாகராஜன், நிவேதா முருகன், கௌதமன், செல்லபாண்டியன், வைரமணி, துணை அமைப்புச் செயலாளர் தாயகம் கவி, விவசாய அணி செயலாளர் ஏ.கே.எஸ்.விஜயன், விவசாய தொழிலாளர் அணி செயலாளர் அன்னியூர் சிவா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் எஸ்.கல்யாணசுந்தரம், முரசொலி, அருண் நேரு, குத்தாலம் கல்யாணம், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ராமலிங்கம், தோழமை இயக்கங்களின் நிர்வாகிகள் பி.எஸ்.சிவநேசன், எம்.எஸ்.கண்ணன், ஆரோக்கியசாமி, பல்வேறு விவசாயச் சங்கங்களின் நிர்வாகிகள், காவிரி தனபால், இளங்கீரன், பூ.ரா.விஸ்வநாதன், கக்கரை சுகுமாரன், தெய்வசிகாமணி, பழனியப்பன், கோபி கணேசன், தளபதி, ராமசாமி, கோவிந்தராஜ், முகமது இப்ராகிம்,

சட்டமன்ற உறுப்பினர்கள் அண்ணாதுரை, அசோக்குமார், கதிரவன், மருத்துவர் முத்துராஜா, சபா ராஜேந்திரன், கலைக்கதிரவன், மாநகரச் செயலாளர் சண்.ராமநாதன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் டி.கே.ஜி. நீலமேகம், கழக அணிகளின் மாநில நிர்வாகிகள் அப்துல்லா, வீரமணி, இளையராஜா, அப்துல் மாலிக், ஜித்து, பி.என்.மணி, வெங்கடேசன், சின்னையன், கோவிந்தராஜ், ரவிச்சந்திரன், வினோத்குமார், சுப்பிரமணியன் உள்பட கழக முன்னணியினர், கூட்டணிக்கட்சித் தலைவர்கள் மற்றும் ஏராளமான விவசாயிகள், பொதுமக்கள் உள்பட பலரும் கலந்துகொண்டனர்.

திருவண்ணாமலை தூய்மை அருணை அமைப்பின் மூலம்

மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வு பிரச்சாரம்!

முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு தொடங்கி வைத்தார்!

திருவண்ணாமலை, ஆக.4–

திருவண்ணாமலை தூய்மை அருணை அமைப்பின் மூலம், மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வு பிரச்சாரம் நடைபெற்றது. முன்னாள் அமைச்சரும், தூய்மை அருணையின் அமைப்பாளருமான எ.வ.வேலு அவர்கள் வீதி, வீதியாக சென்று விழிப்புணர்வு துண்டு பிரசுரங்களை வழங்கினார்.

திருவண்ணாமலையில் தொண்டு செய்வோம், துணை நிற்போம் என்ற முழக்கத்தோடு கடந்த 8 ஆண்டுகளாக முன்னாள் பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்களை அமைப்பாளராகக் கொண்டு, தூய்மை அருணை திட்டம் செயல்பட்டு வருகிறது. தூய்மை அருணை திட்டத்திற்கு 4 மேற்பார்வையாளர்களும், 39 வார்டுக்கு

39 ஒருங்கிணைப்பாளர்களும், மாட வீதி தூய்மைப் பணிக்கு 7 ஒருங்கிணைப்பாளர்களும் ஒவ்வொரு வார்டுக்கும் 25 தூய்மைக் காவலர்கள் என ஆயிரக் கணக்கானோர் மரம் நடுதல், பராமரித்தல், கால்வாய் மற்றும் தூர்வாருதல் என செயல்பட்டு வருகின்றனர்.

இதனைத் தொடர்ந்து, தூய்மை அருணை அமைப்பும், அருணை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையும் இணைந்து, கர்ப்பிணி தாய்மார்களுக்கு வளைகாப்பு நிகழ்ச்சி மாதந்தோறும் நடத்துவதென தீர்மானிக்கப்பட்டு, முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் ஜூலை 16 அன்று தொடங்கி வைத்தார்கள். இது மாதந்தோறும் நடைபெற்று வருகிறது. அதனைத் தொடர்ந்து...

02.08.2026 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 7.00மணிக்கு, திருவண்ணாமலை, அண்ணாமலையார் திருக்கோயில் எதிரிலிருந்து, தூய்மை அருணை அமைப்பின் மூலம், மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வு பிரச்சாரம் நடைபெற்றது.

திருவண்ணாமலை மாநகரில் பெருகி வரும் மக்கள் தொகை, அருணை மாநகருக்கு தினசரி வருகை தரும் ஆன்மீகப் பெருமக்களின் வருகையினாலும், தங்குமிடங்களில் போடப்படும் அதிகளவு ஆழ் துளைக் கிணறுகளாலும், மாநகரில் நிலத்தடி நீர்மட்டம் வெகுவாகக் குறைந்து குடிநீர் பிரச்சினை தலை விரித்தாடுகிறது.

ஏனவே, மாநகரில் உள்ள பொது மக்கள் தங்கள் இல்லங்களில் மழைக்காலம் தொடங்கும் முன் மழைநீர் தேக்கத் தொட்டி அமைத்திட, தூய்மை அருணை அமைப்பின் மூலம் விழிப்புணர்வு பிரச்சாரம் நடைபெற்றது.

முன்னாள் அமைச்சரும், தூய்மை அருணையின் அமைப்பாளருமான எ.வ.வேலு அவர்கள், திருவண்ணாமலை மாநகரில் வீதி, வீதியாக சென்று பொதுமக்களிடம் மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வு துண்டறிக்கைகளை வழங்கினார். அண்ணாமலையார் திருக்கோயில் அருகிலிருந்து விழிப்புணர்வு பிரச்சாரத்தை தொடங்கி வைத்து உரையாற்றும்போது...

தொண்டு செய்வோம், துணை நிற்போம் என்ற இலட்சியத்துடன் கடந்த 8 வருடங்களாக செயல்பட்டு வரும் தூய்மை அருணை அமைப்பு, முதல் கட்டமாக திருவண்ணாமலை மாநகரில் அதிகளவில் வருகைத் தரும் ஆன்மீகப் பக்தர்களுகாக தூய்மைப் பணியையும், இரண்டாம் கட்டமாக மரம் நடுதல், பராமரித்தல், மூன்றாம் கட்டமாக கர்ப்பிணி தாய்மார்களுக்கு மாதம் தோறும் வளைகாப்பு நிகழ்ச்சி நடத்தி வருகிறோம்.

இதனைத் தொடர்ந்து தற்போது மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வு பிரச்சாரத்தை தொடங்கி, மழைநீர் தேக்கத் தொட்டி மற்றும் குடிநீர் வீணாவதை தடுத்தல் குறித்த பிரச்சாரம் நடைபெறுகிறது. தூய்மை அருணை அமைப்பு பல நூற்றாண்டு காலமாக பாழடைந்து கிடத்த அய்யங்குளத்தை தூர் வாரி புனரமைத்ததன் காரணமாக இன்று தீர்த்தவாரியும், தெப்பல் உற்சவமும் சிறப்பாக நடைபெறுகிறது.

திருவண்ணாமலை மாநகரில் 2017ஆம் ஆண்டு அய்யங்குளம் புனரமைப்பதற்கு முன்பாகவே, எல்லை பிள்ளையார் குளம், பிள்ளை குளம், ஐடாயு தீர்த்தம், செட்டிக்குளம், கீழ்நாத்தூர் செட்டிக்குளம், இராகவேந்திரா நகரில் உள்ள குளங்களையெல்லாம் பல இலட்சம் ரூபாய் செலவில் தூர் வாரி புனரமைத்ததன் காரணமாக, திருவண்ணாமலை மாநகரில் நிலத்தடி நீர்மட்டம் உயர்த்தது. தூய்மை அருணை யின் மரம் வளர்ப்பதன் காரணமாக சுற்றுச்சூழல் சமன்படுத்தப்பட்டு, திருவண்ணாமலை மாநகரம் சிறப்பாக விளங்கி வருகிறது.

திருவண்ணாமலை கீழ்நாத்தூரில் உள்ள ஒரு குளமும், குன்றக்குடி அடிகளார் நகரில் உள்ள ஒரு குளமும், அடிஅண்ணாமலையில் ஒரு குளமும், தூய்மை அருணை அமைப்பின் சார்பில் தூர் வாரி புனரமைத்திட அனுமதி கோரியுள்ளோம். அனுமதி கிடைத்தவுடன் அந்த பணிகள் உடனடியாக தொடங்கும்.

இயற்கையின் வளத்தை நாம் மட்டும் அனுபவிக்காமல், வருங்கால நமது சந்ததியினருக்கும் வளமான பூமியை விட்டுச் செல்லவேண்டியது நம் அனைவரின் கடமையாகும். இவ்வாறு உரையாற்றினார்.

சன்னதி தெரு, இராமலிங்கனார் தெரு, வேட்டவலம் ரோடு, திருக்கோயிலூர் ரோடு, திருவள்ளுவர் சிலை வரை நடந்து சென்று விழிப்புணர்வு கை பிரதிகளை வழங்கி, மழைநீர் சேமிப்பு மற்றும் மழைநீர் தேக்கத் தொட்டியின் அவசியம் குறித்து விளக்கினார்.

இதனைத் தொடர்ந்து, 39 வார்டுகளிலும் மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வு கைப் பிரதிகள் வீடு, வீடாக தூய்மைக் காவலர்களால் வழங்கப்பட்டது.

தூய்மைப் பணியில் தூய்மை அருணையின் மேற்பார்வையாளர்கள் நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, ப.கார்த்திவேல்மாறன், ப்ரியா ப.விஜயரங்கன், இல.குணசேகரன், துணை மேயர் சு.ராஜாங்கம், ஒருங்கிணைப்பாளர்கள் அ.கோவிந்தன், செ.எழில்மாறன், ஏ.ஏ.ஆறுமுகம், ம.வினோத்குமார், எஸ்.கே.டி.வீரா, வழக்கறிஞர்கள் ம.செந்தில், கிருஷ்ணமூர்த்தி, வழக்கறிஞர் ந.சீனுவாசன், இரா.அருண், மெட்ராஸ் கே.சுப்பிரமணி, காலேஜ் கு.ரவி, கே.காளிதாஸ், குட்டி க.புகழேந்தி, சி.சண்முகம், பி.ஆர்.நாகராஜ், கு.குமார், மண்டி.பிரகாஷ், மு.கருணாமூர்த்தி, இரா.ராஜாமணி, அ.திவாகர், அ.பழனி, கே.பிரகாஷ், பி.ஜி.முருகன், கோபி.சங்கர், சென்னை.சுரேஷ், முபாரக், லயன். ஷெரீப். கா.ஏழுமலை, எஸ்.ஜாகீர், இரா.ஜோதி, கு.தியாகு, மூ.காமேஷ், ஹக்கிம்சேட், சி.கே.சசிக்குமார், கோல்டு.எஸ்.பிரபு மற்றும் மாட வீதி ஒருங்கிணைப்பாளர்கள் சினம்.பெருமாள், ஆர்.கே.பாஸ்கர், ஜீவரேகாவிஜயராஜ், அருணை. வெங்கட் உட்பட ஆயிரக்கணக்கான தூய்மைக் காவலர்களும் கலந்து கொண்டனர்.

ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ்

தமிழ்நாட்டிற்கு கூடுதல் நிதி வழங்கப்பட்டுள்ளதா?

மக்களவையில் தமிழச்சி தங்கபாண்டியன் கேள்வி!

புதுடெல்லி, ஆக. 4- தென் சென்னை மக்களவை உறுப்பினர் டாக்டர் தமிழச்சி தங்கபாண்டியன், ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் (ICDS) கீழ் 2014 முதல் 2024 வரை மாநில வாரியாகவும், தமிழ்நாட்டிற்கான நிதி ஒதுக்கீடு, விடுவிப்பு, பயன்பாடு, அங்கன்வாடி மையங்கள் மற்றும் தமிழ்நாடு தனது பங்கிற்கு மேல் கூடுதல் நிதி வழங்கியுள்ளதா என்பது குறித்து மக்களவையில் கேள்வி எழுப்பினார்.

அதாவது, கடந்த 2014 முதல் 2024 வரையிலான காலகட்டத்தில் ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் (ICDS) கீழ் மாநில வாரியாகவும், தமிழ்நாட்டிற்குமான நிதி ஒதுக்கீடு, விடுவிப்பு மற்றும் பயன்பாட்டு விவரங்கள் என்ன? தமிழ்நாட்டில் முழுமையாக நிதியுதவி பெற்று செயல்பட்டு வரும் அங்கன்வாடி மையங்கள் மற்றும் ICDS திட்டங்களின் எண்ணிக்கை என்ன? 2015 முதல் மாநிலத்தின் கட்டாய பங்களிப்புக்கு மேலாக தமிழ்நாடு கூடுதல் நிதி வழங்கியுள்ளதா? அவ்வாறு வழங்கியிருந்தால் அதன் ஆண்டுவாரியான விவரங்கள் என்ன? என்று கேள்வி எழுப்பினார்.

இதற்கு மத்திய மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறை இணையமைச்சர் சாவித்ரி தாக்கூர் எழுத்துப்பூர்வமாக பதில் அளித்தார். அந்த பதிலில்:-

சக்ஷம் அங்கன்வாடி மற்றும் போஷன் 2.0திட்டத்தின் கீழ் மாநில வாரியாகவும், ஆண்டுவாரியாகவும் செயல்பட்டு வரும் அங்கன்வாடி மையங்கள் மற்றும் திட்டங்களின் விவரங்கள் போஷன் டிராக்கர் பொதுத் தகவல் தளத்தில் வெளியிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

2014-15 முதல் 2024-25 வரையிலான காலகட்டத்தில், சக்ஷம் அங்கன்வாடி மற்றும் போஷன் 2.0 திட்டத்தின் கீழ் மத்திய அரசு ஆண்டுதோறும் நிதி விடுவித்துள்ளது. அதன்படி, 2023-24ஆம் ஆண்டில் 88,078.90 லட்சமும், 2024-25ஆம் ஆண்டில் 63,847.46 லட்சமும் தமிழ்நாட்டிற்கு விடுவிக்கப்பட்டுள்ளதாக இணைப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேபோல், 2014-15 முதல் 2024-25 வரையிலான அனைத்து ஆண்டுகளுக்குமான மாநில வாரியான நிதி விவரங்களும் இணைப்பில் இடம்பெற்றுள்ளன.

மேலும், சக்ஷம் அங்கன்வாடி மற்றும் போஷன் 2.0 என்பது மத்திய அரசு நிதியுதவி வழங்கும் திட்டமாகும். திட்டத்தை நடைமுறைப்படுத்துவது மாநில அரசுகள் மற்றும் யூனியன் பிரதேச நிர்வாகங்களின் பொறுப்பாகும். பயனாளிகளுக்கு சேவைகள் தடையின்றி கிடைப்பதை உறுதி செய்வதற்காக, மாநில அரசுகளுடன் தொடர்ந்து ஆலோசனைகள் மற்றும் காணொலி மாநாடுகள் நடத்தப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், திட்டத்தின் செலவினப் பகிர்வு விகிதம் குறித்தும் மத்திய அரசு விளக்கம் அளித்துள்ளது. சட்டப்பேரவை கொண்ட மாநிலங்களில் ஊதியச் செலவுக்கு மத்திய-மாநில பங்களிப்பு விகிதம் 60:40, துணை ஊட்டச்சத்து செலவுக்கு 50:50 என்றும், வடகிழக்கு மற்றும் இமயமலை மாநிலங்களுக்கு 90:10 என்ற விகிதத்திலும், சட்டப்பேரவை இல்லாத யூனியன் பிரதேசங்களுக்கு 100% மத்திய நிதி வழங்கப்படுவதாகவும் பதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விக்கிரவாண்டி – கும்பகோணம்

தேசிய நெடுஞ்சாலைப் பணிகளை விரைந்து முடித்திடுவீர்!

ஒன்றிய அமைச்சருக்கு டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி. கடிதம்!

சென்னை, ஆக. 4–

கும்பகோணத்தில் நடைபெறவுள்ள 2028 மகாமகத் திருவிழாவிற்கு முன் விக்கிரவாண்டி–நெய்வேலி–வடலூர்–அணைக்கரை–கும்பகோணம் தேசிய நெடுஞ்சாலை (NH36) பணிகளை விரைந்து முடிக்க வேண்டும் என்று ஒன்றிய அமைச்சர் நிதின் கட்கரிக்கு வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி கோரிக்கை விடுத்துள்ளார்.

வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி, மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் துறை அமைச்சர் நிதின் ஜெய்ராம் கட்கரி அவர்களுக்கு கடிதம் எழுதி, விக்கிர வாண்டி–நெய்வேலி–வடலூர்–அணைக்கரை–கும்பகோணம் தேசிய நெடுஞ்சாலை (NH 36) நான்கு வழிச்சாலைப் பணிகளை விரைந்து நிறைவு செய்ய உடனடி நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தியுள்ளார்.

அந்தக் கடிதத்தில், சென்னை, நெய்வேலி தொழில்துறை பகுதி மற்றும் காவிரி டெல்டா மாவட்டங்களை இணைக்கும் முக்கிய போக்குவரத்து வழித்தடமாக விளங்கும் NH36 சாலையின் சில பகுதிகளில் பணிகள் முன்னேற்றம் கண்டுள்ள போதிலும், குறிப்பாக விக்கிரவாண்டி–சேத்தியாத்தோப்பு பகுதியில் பணிகள் தாமதமாக நடைபெற்று வருவது குறித்து கவலை தெரிவித்துள்ளார்.

மேலும், திருப்திகரமான முன்னேற்றம் இல்லாததால் முந்தைய ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டு, மீதமுள்ள பணிகளுக்கு இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் (NHAI) புதிய ஒப்பந்தப்புள்ளிகளை வெளியிட்டிருப்பதையும் சுட்டிக்காட்டியுள்ள அவர், திட்டப் பணிகளை தொடர்ந்து கண்காணித்து, விரைந்து நிறைவு செய்ய தேவையான உத்தரவுகளை வழங்குமாறு மத்திய அமைச்சரிடம் கேட்டுக் கொண்டுள்ளார்.

2028 ஆம் ஆண்டு கும்பகோணத்தில் நடைபெறவுள்ள உலகப் புகழ்பெற்ற மகாமகத் திருவிழாவிற்கு இந்தியா முழுவதிலும் இருந்தும் வெளிநாடுகளி லிருந்தும் லட்சக்கணக்கான பக்தர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் வருகை தரவுள்ள நிலையில், அதற்கு முன்னதாக தேசிய நெடுஞ்சாலை36 முழுமையாக நிறை வடைவது மிகவும் அவசியம் என டாக்டர் கலாநிதி வீராசாமி வலியுறுத்தியுள்ளார்.

இத்திட்டம் நிறைவடைந்தால் சென்னை–காவிரி டெல்டா பகுதிகளுக்கிடையேயான போக்கு வரத்து நெரிசல் குறைவதுடன், நெய்வேலி தொழில்துறை வளர்ச்சி, சரக்கு போக்குவரத்து, விவசாய விளைபொருட்களின் விரைவான போக்கு வரத்து மற்றும் கும்பகோணம்–தஞ்சாவூர் இடையேயான பயண நேரக் குறைப்பு உள்ளிட்ட பல்வேறு நன்மைகள் ஏற்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனவே, 2028 மகாமகத் திருவிழாவிற்கு முன்னதாகவே தேசிய நெடுஞ்சாலை36 முழுமையாக நிறைவடைய தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மத்திய அரசு உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என்று வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி தனது கடிதத்தின் மூலம் வலியுறுத்தியுள்ளார்.

திருப்பத்தூர் மாவட்டச் செயற்குழுக் கூட்டம்!

மாவட்டக் கழக செயலாளர் க.தேவராஜி அறிவிப்பு!

திருப்பத்தூர், ஆக, 4- திருப்பத்தூர் மாவட்டக் கழகச் செயலாளர் க.தேவராஜி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

திருப்பத்தூர் மாவட்டச் செயற்குழுக் கூட்டம் நாளை புதன்கிழமை (05-08-2026) காலை 10.30 மணியளவில் வாணியம்பாடியிலுள்ள மாவட்டக் கழக அலுவகத்தில் மாவட்ட அவைத்தலைவர் ஆர்.எஸ்.ஆனந்தன் தலைமையில் நடைபெற உள்ளது.

நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட கழக நிர்வாகிகள், நகர, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநில, மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: 1.முத்த மிழறிஞர் கலைஞர் அவர்களின் 8 ஆம் ஆண்டு புகழஞ்சலி.

2.கழக ஆக்கப் பணிகள்

இவ்வாறு திருப்பத்தூர் மாவட்டச் செயலாளர் க.தேவராஜி தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.